# திரை மொழி THIRAI MOZHI

RNI No: TNTAM/2023/88599

TAMIL MONTHLY தமிழ் மாத இதழ்

| திரை : 03 | மொழி : 1 | ஆகஸ்டு - 2025 | பக்கம்: 8 | விலை: ரூ.10 |
|---|---|---|---|---|
| Volume : 03 | Issue : 1 | August - 2025 | Page: 8 | Price: Rs. 10 |





கேப்டன் பிரபாகரன் Digital Re Release Audio & Trailer Launch.

# மேக்கிங் மேக்கர்...

## இயக்குநர் ஆர்.கே.செல்வமணி

மேக்கிங்.. இந்த சொல் சினிமாவிற்கு சொந்தமான ஒரு சொல்... தற்போது அனைவருக்கும் பரிசயமான இந்த வார்த்தை 34 வருடங்களுக்கு முன்பு திரை ரசிகர்களுக்கு உண்மையில் ஒரு புது வார்த்தையாக தான் இருந்தது.. கதை நன்றாக இருந்தது வசனம் நன்றாக இருந்தது டைரக்ஷன் நன்றாக இருந்தது என்று சொல்லிக் கொண்டிருந்த அந்த காலகட்டத்தில் மேக்கிங் அசத்தி விட்டார் என்று திரைப்படம் எடுக்கும் பாணியை ஹாலிவுட் ரேஞ்சுக்கு மாற்றிய பெருமை ஒரு இயக்குனராக முழுக்க முழுக்க ஆர்கே செல்வமணி அவர்களை மட்டுமே சாரும்.. ஆம் மேக்கிங் என்ற வார்த்தைக் கான அர்த்தத்தை அன்று கூகுளில் தேட முடியாது இன்டர்நெட்டில் தேட முடியாது உண்மையான மேக்கிங் அதற்கான அர்த்தத்தை தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் 1991 காலகட்டத்தில் திரையரங்கை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த ஒரு ராட்சச படமான கேப்டன் பிரபாகரன் என்ற படத்தைத்தான் பார்க்க வேண்டும்... அந்தப் படத்தை பார்த்த பின்பு தான் யாரிடமும் கேட்டுக் கொள்ளாமல் எங்கேயும் தேடாமல் திரைப்படத்தின் காட்சிகள் மூலம் மேக்கிங் என்ற வார்த்தை பதிந்தது எனக்கு.. புரட்சி கலைஞர் திரைப்படம் என்றாலே அடிதடி என்று அட்டகாச மாக தீ பறக்க இருக்கும். ஆனால் அதிலிருந்து மாறுபட்டு புதுவிதமான புரட்சிக் கலைஞரை காட்டிய படம் தான் புலன் விசாரணை..

**புரட்சிக் கலைஞர் என்று அன்பாக அழைக்கப்பட்ட விஜயகாந்த் அவர்கள் இத்திரைப் படத்திற்கு பிறகு இன்று வரை கேப்டனாகவே போற்றப்படுகிறார்**

புலன் விசாரணையின் பிரம்மாண்ட வெற்றிக்கு பிறகு புரட்சி கலைஞரின் நூறாவது படம் என்று



அறிவிப்போடு கேப்டன் பிரபாகரன் வருகிறது. இப்போது போன்ற அன்றிருந்த கால கட்டத்தில் ஒரு இயக்குனருக்காகவோ, அல்லது ஒரு டெக்னீசியன்களுக்காகவோ ரசிகர்கள் போய் திரைப்படம் பார்க்க மாட்டார்கள்.

> பக்கம் 2ல் தொடரும்



டிஸ்கவரி புக் பேலஸ்


டிஸ்கவரி ஆர்ட் கேலரி

## டிஸ்கவரி புக் பேலஸ்

1055-B, முனுசாமி சாலை, கே.கே. நகர்,

சென்னை-78 | 9940446650

**திரையிடல், நூல் வெளியீட்டுக்கான 70 பேர் அமரக்கூடிய சிற்றரங்கம்**


பிரபஞ்சன் அரங்கம்


ஜெயகாந்தன் குடில்

டிஸ்கவரி புட் கார்னர்




கேப்டன் பிரபாகரன் Digital Re Release வெளியீடு அறிவிப்பு விழா

முழுக்க முழுக்க அந்த படத்தின் கதாநாயகனுக்காகவும் இளையராஜா என்ற இசையமைப் பாளருக்காகவும் தான் ரசிகர்கள் படம் பார்க்க திரையரங்கிற்கு செல்வார்கள்.. அந்த காலகட்டத்தில் அதுவும் ஒரு இளம் இயக்குநராக தனது இரண்டாவது படம் மூலமாக புரட்சி கலைஞரின் நூறாவது படத்தை பார்க்க ஒட்டு மொத்த மக்களையும் ரசிகர்களையும் திரையரங்கிற்கு அழைத்து வந்து இயக்குநருக்கான புதிய பாதையை அமைத்த பெருமை இயக்குநர் ஆர் கே செல்வமணி அவர்களுக்கு மட்டும்தான் சொந்தம்.. ஆம், இன்று போல் அன்று ஒரு திரைப்படத்திற்கு போலியான பப்ளிசிட்டிகள் கிடையாது தேவையற்ற பிரமோஷன்களும் கிடையாது. ஆனால், அதை எல்லாம் மீறி ஒரு திரைப்படம் அனைவரையும் எதிர் பார்க்க வைத்தது. 1991 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தமிழ் புத்தாண்டு அன்று கேப்டன் பிரபாகரன் என்ற படம் பிரம்மாண்டமாக வெளியானது

தமிழ் திரையுலகில் பல முன்னணி நடிகர்கள் தங்களது நூறாவது படத்தை வெற்றி படமாக அமைக்க போராடி தோல்வி கண்டபோதும் விஜயகாந்த் மட்டும் அதற்கு ஒரு விதிவிலக்காக இருந்தார். ஆம், கேப்டன் பிரபாகரன் தமிழ் திரை உலகில் புதிய அத்தியாயத்தை எழுதி சாதனை படைத்தது. அந்த சாதனையை நிகழ்த்தி காட்டியது இயக்குநர் ஆர்.கே.செல்வமணி அவர்கள் தான். குறிப்பாக கேப்டன் பிரபாகரனுக்கு முன் கேப்டன் பிரபாகரனுக்கு பின் என்று தமிழ் சினிமாவையே பிரித்துக் கூட பார்க்கலாம் அந்த அளவிற்கு இந்த படம் திரையுலகில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது என்று கூறினால் அது மிகையாகாது. புரட்சிக் கலைஞர் என்ற அன்பாக அழைக்கப்பட்ட விஜயகாந்த் அவர்கள் இத்திரைப் படத்திற்கு பிறகு இன்று வரை கேப்டனாகவே போற்றப்படுகிறார்.

மன்சூர் அலிகான் என்ற ஒரு அசுரத்தனமான வில்லனை இத்திரைப் படத்தில் பதிவு செய்த பிறகு இப்போது வரை வில்லன் கதாபாத்திரத்தை அதேபோன்று அழுத்தமாக பதிவு செய்ய பல இயக்குநர்களும் போராடி தான் வருகிறார்கள். ஆட்டமா தேரோட்டமா என்ற பாடல் இத்திரைப்படத்தில் காட்சி அமைக்கப்பட்ட விதம் இன்று வரை அதே போன்ற சாயலில் பல திரைப் படங்களில் பின்பற்றுகிறார்கள். காட்சிக்கு காட்சி பிரம்மாண்டம் நொடிக்கு நொடி பதட்டம் ஏற்படுத்தக் கூடிய திரைக்கதை அனல் பறக்கும் லியாகத் அலிகானின் வசனம் அனைத்திற்கும் மேல் நான் முதலில் குறிப்பிட்டதை போல மேக்கிங் என்ற வார்த்தைக்கு முதன் முதலில் திரையுலகில் உருவம் கொடுத்த இயக்குனரின் காட்சி பதிவுகள் என அனைத்தும் சேர்ந்து இத்தனை வருடங்கள் கழித்தும் கேப்டன் பிரபாகரனுக்கு என்று தனி சிம்மாசனம் இந்திய திரை உலகில் உள்ளது. அப்போது மதுரையில் பிரமாண்டமான முறையில் வெளிவந்த இந்த திரைப் படத்தை பார்க்க திரையரங்கிற்கு என்னை எனது தந்தை அழைத்துச் சென்றபோது அங்கிருந்த மக்கள் கூட்டமும் தியேட்டர் எக்ஸ்பீரியன்ஸ் என்று சொல்லக்கூடிய ஒரு விதமான ஒரு அழகிய நினைவுகளும் இப்போது வரை என்னால் மறக்க முடியவில்லை. உண்மையில் அன்றைய காலகட்டத்தில் அந்த திரைப்படத்தை திரையரங்கில் பார்த்த அனைவருக்கும் இந்த அனுபவம் இப்போது வரை நினைவில் இருக்கும் என்பதில் என்ற மாற்றமும் இல்லை.

கதையும் பிரம்மாண்டமும் இணைந்தால் தான் சரித்திரம் படைக்க முடியும் என்பதற்கு கேப்டன் பிரபாகரன் ஒரு முன் உதாரணம். சத்தியமங்கலம் வனப்பகுதியில் வீரபத்திரன் என்ற கொள்ளைக்காரனின் அட்டகாசத்தால் நாடே அச்சமடைய, மக்கள் பீதியில் இருக்கும் நேரத்தில் கேப்டன் பிரபாகரன் என்ற காவல் அதிகாரியிடம் அவனை கண்டுபிடித்து கைது செய்யும் பொறுப்பு ஒப்படைக்கப்படுகிறது. ஏற்கனவே தனது நண்பன் வீரபத்திரனால் கொலை செய்யப்பட்டிருக்க, பல சவால்களை எதிர்கொண்டு எப்படி கண்டுபிடிக்கிறார் என்பதும், அவனுக்கு பின்னால் எத்தனை அரசியல்வாதிகளின் தொடர்புகள் இருக்கிறது என்பதை வெளியில் கொண்டு வருவது தான் இந்தப் படத்தின் கதை.

குறிப்பாக, ஒரு கதாநாயகன் ஒரு திரைப்படம் ஆரம்பித்த ஐந்து அல்லது பத்து நிமிடத்திற்குள் அறிமுக காட்சி இருக்கும். ஆனால், இந்த திரைப் படத்தில் 32 வது நிமிடம் 55வது நொடிகளில் தான் இத்திரைப்படத்தின் கதாநாயகன் விஜயகாந்த் அவர்களின் அறிமுக காட்சி இருக்கும். உண்மையில் இப்படி ஒரு முடிவை அந்த கால கட்டத்தில் எடுப்பதற்கு கேப்டன் விஜயகாந்திற்கும், இயக்குநர் ஆர். கே.செல்வமணிக்கும் ஒரு தனி தைரியம் வேண்டும். *(That's called making style)*

ரயில் ஒரு புறம் ஓடிக்கொண்டிருக்கும் போது மறுபுறம் குதிரை சண்டை. உண்மையில் தமிழ் சினிமா வரலாற்றில் அதுபோன்ற ஒரு பிரம்மாண்ட காட்சி அதற்கு முன் பார்க்க வாய்ப்பு இருக்காது இன்று கூட எத்தனையோ திரைப்படங்களில் பல சண்டைக் காட்சிகளை பிரம்மாண்டமான முறையில் படம் பிடித்தாலும் கேப்டன் பிரபாகரன் திரைப்படத்தில் இடம்பெற்ற அந்த குதிரை சண்டை காட்சி உண்மையில் பிரமிப்பையும் ஆச்சரியத்தையும் அள்ளி தந்தது. *(That's called making style)*

**தமிழ் திரையுலகில் கேப்டன் பிரபாகரன் என்ற ஒரு திரைப்படத்தின் மேக்கிங்கும், வெற்றியும் சாதனைகளையும் இன்று வரை எந்த ஒரு திரைப்படத்தாலயும் REPLACEMENT செய்ய முடியவில்லை. செய்யவும் முடியாது.**

எனது தனிப்பட்ட அனுபவத்தில் உண்மையில் ஒரு திரைப்படத்தின் கதாபாத்திரத்தை பார்த்து பயந்தேன் என்றால் அது இரண்டு கதாபாத்திரம் தான். ஒன்று மணிசித்திரதாழ் (தமிழ் சந்திரமுகியின் original version) திரைப்படத்தில் வந்த நாகவல்லி கதாபாத்திரம் அதை பார்த்து நான் பல நாட்கள் மாலை வேலைக்கு பிறகு வீட்டை விட்டு வெளியே சென்றது கிடையாது.

ஆனால் அதற்கு முன் நான் பார்த்த பயந்த ஒரு கதாபாத்திரம் என்றால் அது கேப்டன் பிரபாகரன் திரைப்படத்தில் மன்சூர் அலிகான் அவர்கள் நடித்த வீரபத்திரன் கதாபாத்திரம் தான். தமிழ் சினிமாவின் முக்கிய வில்லன் வேடங்களில் முதல் இடத்தில் வீரபத்திரனின் கதாபாத்திரம் சித்தரிக்கப்பட்டிருக்கும். என்னைப் பொருத்தவரை அதற்கு முன்பும் சரி, அதற்கு பின்பும் சரி அவ்வளவு கொடூரமான, அதே நேரத்தில் மிக முக்கியமான கதாபாத்திரமாக ஒரு பாத்திரத்தை வடிவமைத்திருக்க முடியாது. சந்தன கடத்தல் வீரப்பனை மேற்கோளாகக் கொண்டு உருவாக்கப் பட்ட அந்த கதாபாத்திரம் உண்மையில் இயக்குநரின் எழுத்தும் மன்சூர் அலிகான் அவர்களின் நடிப்பும் சேர்ந்து ஒரு மிரட்டலான அனுபவத்தை கொடுத்தது. *(That's called making style)*

வில்லன் கதாபாத்திரம் இருக்கும் இடத்தில் ஆட்டமா தேரோட்டமா என்ற அதிரடியான ஒரு பாடல், அந்தப் பாடல் ஓடிக் கொண்டிருக்கும்போதே மாஸாக ஹீரோ அந்த இடத்திற்கு வந்து கொண்டிருப்பதை காட்டுவது உண்மையில் கேப்டன் பிரபாகரன் திரைப்படத்திற்கு பிறகு இதுபோன்ற ஒரு சீன் தற்போது வரை வெளிவந்து கொண்டிருக்கும் திரைப்படத்தில் பாலோ செய்து கொண்டிருக்கிறார்கள். *(That's called making style)*



கேப்டன் பிரபாகரன் Digital Re Release வெளியீடு அறிவிப்பு விழா

எல்லாவற்றுக்கும் மேலாக படத்தின் இறுதிக் காட்சிகள் மக்கள் வெள்ளம் படையெடுத்து நிற்க அங்கே வில்லனை அடித்து இழுத்துக் கொண்டு வருவது போன்ற ஒரு பிரம்மாண்டம் மற்றும் மாசான ஒரு காட்சி அதன் பிறகு இப்போது வரை தமிழ் சினிமா கண்டதில்லை..

வசனம் ஒவ்வொன்றும் சாட்டையடி போல் எழுதி இருப்பார் வசனகர்த்தா லியாகத் அலிகான்.

அரசியல்வாதிகளையும் பெரும் புள்ளிகளையும் குறி வைத்து நெற்றி பொட்டில் அடித்தார் போல் எழுதப் பட்டிருக்கும் வசனம் அன்றைய காலகட்டத்தில் பெரும் பரபரப்பு ஏற்படுத்தியது. இப்படி இந்த திரைப்படத்தை குறித்து பேச வேண்டுமென்றால் நடிப்பு, இயக்கம், இசை, ஒளிப்பதிவு, சண்டைக்காட்சிகள்




**மறைந்த தேமுதிக தலைவரும் நடிகருமான கேப்டன் விஜயகாந்தின் மகன் சண்முகபாண்டியனை வைத்து கேப்டன பிரபாகரன் 2 படம் எடுக்க ஆசை. என்னை வளர்த்த விஜயகாந்துக்கு நன்றி கடனாக அதை செய்ய விரும்புகிறேன். இயக்குநர் ஆர்.கே.செல்வமணி.**

என ஒவ்வொன்றை பற்றியும், அதன் பிரமாண்டத்தை பற்றியும் இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம்.

திரை உலகில் ஒரு இயக்குநராக நுழைய நினைக்கும் அனைத்து இளைஞர்களுக்கும் சில திரைப்படங்களும், சில இயக்குநர்களும் முன் உதாரணமாக இருப்பார்கள் அப்படி நான் இன்று வரை நான் கண்டு வியந்த ஒரு பிரம்மாண்ட இயக்குநர் ஆர்.கே. செல்வமணி அவர்கள். ஒரு உண்மை சம்பவத்தை எடுத்து அதை திரை வடிவில் மாசான, பிரம்மாண்டமான வடிவத்தில் அவரது தனிப்பட்ட மேக்கிங் ஸ்டைலில் உருவாக்குவதற்கு அவருக்கு நிகர் அவர் மட்டுமே.

திரையரங்கில் வெற்றி பெற்று சரித்திரம் படைத்து இதுவரை தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப் படாத ஒரு திரைப்படம் என்றால் அது உலகம் சுற்றும் வாலிபன். எனது அறிவில் அதன் பிறகு இப்போது வரை தொலைக்காட்சி யில் நான் பார்க்காத திரைப்படம் கேப்டன் பிரபாகரன். புதிய பொலிவுடன் 34 வருடங்களுக்குப் பிறகு மீண்டும் திரைப்படம் திரையரங்கில் வெளிவர இருக்கிறது என்ற தகவல் அறிந்ததும் உண்மையில் நான் டைம் டிராவல் செய்து பழைய நினைவுகளுக்கு பின்னோக்கி சென்று விட்டேன். காலங்களும் நவீன தொழில்நுட்பங்களும் மாறி மாறி பல திரைப்படங்களின் அசுரதனமான வெற்றியும் இப்போது நாம் பார்க்கும் பல கோடிகளுக்கான வசூலையும் செய்து புது வரலாறுகள் படைத்தாலும். உலக அளவில் சில திரைப்படங்கள் மிக மிக அழுத்தமான சில செயல்களை செய்து விட்டு போகும், அதன் பிறகு அந்தத் திரைப்படம் செய்தது போன்ற நிகழ்வுகளை ஒருகாலமும் மற்ற திரைப்படங்களால் REPLACEMENT செய்ய முடியாது.

உலகத் திரைப்பட ரசிகர்களுக்கு டைட்டானிக் என்ற திரைப்படம் தந்த அழுத்தம் அதன் பிறகு இன்று வரை ஒரு திரைப்படத்தால் REPLACEMENT செய்ய முடியவில்லை. இந்திய திரையரங்கில் சோலே என்ற இந்தி படம் தந்த அழுத்தம் இப்போது வரை REPLACEMENT செய்ய முடியவில்லை. அதேபோன்று தமிழ் திரையுலகில் கேப்டன் பிரபாகரன் என்ற ஒரு திரைப்படத்தின் மேக்கிங்கும், அழுத்தமும் வெற்றியும் சாதனைகளையும் இன்று வரை எந்த ஒரு திரைப்படத்தாலையும் REPLACEMENT செய்ய முடியவில்லை செய்யவும் முடியாது.

இன்று இளைய தலைமுறைகளும் இளைய இயக்குநர்களும் கண்டிப்பாக திரையரங்கிற்கு சென்று புதிய பொலிவில் வெளியாக இருக்கும் கேப்டன் பிரபாகரன் திரைப்படத்தை ஒரு பாடமாக பார்க்க வேண்டும். அழுத்தமான கதை களத்துடன் புதுவிதமான தொழில்நுட்பத்தில் ஹாலிவுட் தரத்தில் ஒரு இளம் இயக்குநர் தனது இரண்டாவது படத்தில் அதுவும் நாடே போற்றும் ஒரு நடிகரின் நூறாவது படத்தை இயக்கிய வரலாற்றை அறிந்து கொள்ள வேண்டும்.

**எழுத்தாளர், இயக்குநர்**
**வி.கார்த்திக் குமார்**

# 'கேப்டன் பிரபாகரன்' ரீ ரிலிஸ் 500 திரையரங்குகளுக்கு மேல்




கேப்டன் பிரபாகரன் 4 K தொழில்நுட்பத்துடன் டிஜிட்டலுக்கு மாற்றப்பட்டு புது வடிவம் பெற்று வருகிற ஆகஸ்ட் 22ஆம் தேதி கேப்டன் விஜயகாந்த் அவர்களின் பிறந்த நாளை ஆகஸ்ட் 25 முன்னிட்டு மீண்டும் ரீ ரிலீஸ் ஆகிறது.

தமிழகம் முழுக்க சுமார் 500 திரையரங்குகளுக்கு மேல் ஸ்பேரோ சினிமா சார்பில் கார்த்திக் வெங்கடேசன் இந்த திரைப்படத்தை மீண்டும் ரிலீஸ் செய்கிறார். கேப்டன் பிரபாகரன் திரைப்படம் மீண்டும் மாபெரும் வெற்றிவாகை சூட திரை மொழி மாத இதழ் சார்பாக வாழ்த்துகிறோம்.

வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்!!



With Best Compliments

Valam Group Companies
your Delight - Our Priority

Veerappan Aruchamy
Chairman & MD
Valam Group of Company's

Vaiyagam Finance Limited
Non Banking Finance Company - NBFC


Arul Valam Chit Funds Pvt Ltd
Wealth & Prosperity

Arul Dhasrath Builders Pvt Ltd
Infrastructure & Home Developers

Valam Nidhi Limited
Deposits, Savings Account, RD Account, Loans
(Exclusive for Members Only)

27, Sudheshna Towers, LIG Colony, M.L. Puram, Pollachi, Coimbatore - 642 002

Website : www.vaiyagamfinance.com ◆ Contact No : +91 94894 27259 ◆ Email : admin@vaiyagamfinance.com




*Marey* என்பது மூன்வேலி வழங்கும் ஒளிப்பதிவு இயக்குநருக்கான ஏ.ஐ. தான் பதிவு செய்யும் ஒவ்வொரு ஃபிரேமிலும் தன்னுடைய கற்பனை மிளிர வேண்டும் என எதிர்பார்ப்பவர்களுக்கான ஏ.ஐ.

*<https://www.moonvalley.com/>*

இதுதான் மூன்வேலியின் முகவரி.

ஒவ்வொரு ஃபிரேமையும் செதுக்க மூன்வேலி 6 முக்கிய வசதிகளைக் கொடுக்கிறது.

1. *Image to Video*
2. *Motion Transfer*
3. *Pose Transfer*
4. *Animate Camera*
5. *Trajectory Control*
6. *Shot Extension*

### 1. Image to Video

முதலில் நமக்குத் தேவையான காட்சியை உருவாக்குதல். இதற்குத் தேவை ஒரு புகைப்படம் அல்லது ஏ. ஐயால் உருவாக்கிய படம். இந்தப் படத்திலிருந்துதான் வீடியோ ஆரம்பிக்கிறது.

### 2. Motion Transfer

அசைவுகளைக் கடத்துவது. உங்களுக்குப் பிடித்த அசைவுகள் உள்ள வீடியோவிலிருந்து, நாம் உருவாக்கப்போகும் வீடியோவிற்கு அசைவுகளைக் கடத்துவது. உதாரணமாக பாட்ஷா படப்பாடல் நீ நடந்தால் நடை அழகு. இதில் உள்ள ரஜினி நடைகளை நாம் உருவாக்கும் கார்டூனுக்கு கூட கொடுக்க முடியும்.

எந்திரனில் வரும் ரோபோ நடனமும், நான் ஈ படத்தில் வரும் ஈ நடனமும் இந்த *Motion Transfer* டெக்னிக்கை பயன்படுத்திதான் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இதனை *Marey* ஏ.ஐ வழியாக உங்கள் கம்ப்யூட்டரிலேயே செய்ய முடியும். இதனை இன்னும் சிறப்பாகச் செய்ய *Keyframes, Reference, Motion Range, Motion Intensity* போன்ற கடிவாளங்கள் நமக்குத் தரப்படுகின்றன. இதனைக் கொண்டு நமது காட்சியை நாம் விரும்பும் வகையில் உருவாக்கிக்கொள்ளலாம்.

### 3. Pose Transfer

உடல் மொழியைக் கடத்துதல். ஒவ்வொரு நடிகருக்கும் உடல்மொழி வேறுபடும். சிவாஜி எம்.ஜி.ஆர் காலம் முதல் ரஜினிகமல் காலம் வரை, ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு உடல் மொழிகள் உண்டு. அவர்களின் உடல் மொழியை நாம் உருவாக்கும் கதாபாத்திரத்துக்கு கடத்த முடியும். தேவைப்பட்டால் இயக்குநரே நடித்துக் காண்பித்து அவருடைய உடல் மொழியை ஏ.ஐ உருவாக்கிய காரெக்டருக்கு கடத்த முடியும். இதனையும் மேம்படுத்த *Keyframes, Reference, Motion Range, Motion Intensity* போன்ற கடிவாளங்கள் கிடைக்கின்றன.

### 4. Animate Camera

காமிரா அனிமேஷன் என்பது மிக வலிமையான வசதி. இந்த வசதியைப் பயன்படுத்தும்போது, ஒரு சாதாரண



புகைப்படம் முப்பரிமாணமாக மாற்றுகிறது. பிறகு அதில் நாம் விரும்பும் கோணங்களுக்கு காமிராவை நகர்த்திக் கொள்ள முடிகிறது. இதனால் நாம் உருவாக்கிய படத்தில் இல்லாத ஒரு காமிராக்கோணம் நமது வீடியோவில் இருக்கும். சந்திரலேகா போன்ற பழைய பிரமாண்ட கருப்பு வெள்ளை படத்தை எடுத்துக் கொள்வோம். அப்படங்களில் டிரோன் காட்சிகள் இருக்காது. ஏனென்றால் அக்காலங்களில் டிரோன் வசதிகள் கிடையாது. காமிராவின் நகர்வுகளும் குறைவாக இருக்கும். தீவிரமாக முயற்சி செய்தால் காமிரா அசைவுகளே இல்லாத காட்சிகளைக் கூட *Mocobot* காமிராவில் படம்பிடித்தது போல மாற்ற முடியும்.

### 5. Trajectory Control

நுண் அசைவுகளை உருவாக்குதல். நாம் உருவாக்கிய ஏ.ஐ சிங்கம், ஒரு சிங்கத்தைப் போல கம்பீரமாகத் திரும்பி கர்ஜிக்க வைக்கலாம். ஏ.ஐ. குதிரையை நிஜ குதிரையைப் போல தலையசைக்க வைக்கலாம். இடம், வலம், மேலே, கீழே என நாம் நினைக்கும் விதத்தில், சிறிய கண் அசைவுகளையும், உதட்டுத் துடிப்புகளையும், முக பாவங்களையும் மாற்ற முடியும். இதனைத்தான் *Trajectory Control* என்று சொல்கிறோம். இதனை வைத்துக்கொண்டு தலை திருப்ப மறந்த நடிகரின் தலையைத் திருப்பி காதலியை பார்க்க வைக்கலாம்.

### 6. Shot Extension

கட் சொன்னதற்குப் பின், அடடா இந்தக் காட்சி இன்னும் சில வினாடிகள் நீடித்திருக்கலாம் என எடிட்டிங் டேபிளில் தோன்றும். இந்த ஏக்கத்தை தீர்க்க 5 வினாடிகள் வரை காட்சியை நீட்டித்து தருகிறது. இந்த வசதி தற்போது அடோப் பிரிமியரிலும் உள்ளது.

ஏ.ஐ சினிமா உருவாக்கத்தில் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய அடிப்படைகள்

1. *Text to Image*
2. *Image to Video*
3. *Text to Video*

### 4. Video to Video

இதில் *Prompt* தான் நமது கடிவாளம். நல்ல பிராம்ப்ட் நல்ல காட்சிகளை உருவாக்கித் தரும். ஆனால் உருவாக்கிய காட்சிகளுக்குள் மாற்றங்கள் செய்ய உதவாது. இதனைச் செய்யத்தான் பின் வரும் ஏ.ஐ உத்திகள் பயன்படுகின்றன.

5. *Motion Transfer*

*(Runway ML also has this feature, called ActTwo)*

6. *Pose Transfer*
7. *Animate Camera*
8. *Trajectory Control*
9. *Shot Extension*

இதனை நன்றாக செய்யப் பழகிய குழு இருந்தால், நீங்கள் நல்ல ஏ.ஐ பட இயக்குநராக மாறலாம்.

### ஏ.ஐ பிலிம் சிட்டி

இது ஒரு அகலக் கனவுதான். ஆனால் என்னை விட்டு அகலாதக் கனவு. பிரம்மாண்ட ஸ்டுடியோ, மகத்தான காமிராக்கள், விளக்குகள் உள்ளிட்ட வழமையான சினிமா கருவிகளின் முக்கியத்துவத்தைக் குறைப்பது. அதன் மூலம் செலவைக் குறைப்பது, சிறிய பட்ஜெட்டிலேயே பாகுபலி அளவிற்கு பெரிய படம் எடுப்பது, இதற்கு ஏ.ஐயை பயன்படுத்து வது என்பதுதான் என் கனவு. சமீபத்தில் இதுபற்றி ஒரு அறிவிப்பை பார்த்தேன். 2000 கோடி மதிப்பீட்டில் இதே கனவுடன் ஒரு குழு ஏ.ஐ பிலிம் சிட்டி அமைக்கப்போவதாக அந்த அறிவிப்பு கூறியது. என்னுடைய கனவு அதைவிட முதலீட்டில் சிறியது.

முதலீட்டை விடுங்கள். ஏ.ஐ பிலிம்சிட்டி என்கிற இந்த ஐடியாவே நடைமுறைக்கு வராது என்கிறார்கள். பிலிமிலிருந்து டிஜிட்டலுக்கும், திரையிலிருந்து ஓடிடிக்கும் இடப்பெயர்ச்சி நடந்தபோது சந்தித்த அதே சந்தேகங்கள், அதே கேள்விகள். ஒவ்வொரு கேள்விக்கும் என்னிடம் பதில் உள்ளதா என்பதை அறிந்து கொள்வதற்காகவே நான் அவர்களை சந்திக்கிறேன். அவர்களின் கேள்விகளின் வழியாகவே நான் மேலும் தெளிவு பெறுகிறேன்.

முதலில் இது பைத்தியக்காரத்தனமாக ஐடியா என்ற ஒருவர், இப்போது தன் பிடிவாதம் தளர்த்திவிட்டார். நீங்கள் சொல்லும் ஏ.ஐ பிலிம்சிட்டி ஐடியா சுவாரசியமாக இருக்கிறது. நடந்தால் நன்றாக இருக்கும் என்றார்.

**-ஐ.எஸ்.ஆர் செல்வகுமார்**
**இயக்குநர்**

**திரை மொழி**

நிறுவனர்/ஆசிரியர் : R. சுப்ரமணிய பாரதி
பொறுப்பு ஆசிரியர் : N. மூர்த்தி
சிறப்பாசிரியர் : M. வேடியப்பன்,
கௌரவ ஆசிரியர்கள் : குரு ரங்கதுரை, ISR செல்வகுமார்
உதவி ஆசிரியர்கள் : ஸ்ரீராம் பத்மநாபன், V. கார்த்தி குமார்
தலைமை நிருபர் : பாலமுரளிவர்மன்
நிருபர் : தங்கமித்ரன்

தொடர்புக்கு :
thiraimozhinews@gmail.com
9500074478 | 9566153766

# ஹாலிவுட் கதையமைப்பில் ‘நளவெண்பா’

உச்சந் தலையில் சந்தனத்தை பூசியபடி, திருப்பதிக்கு போன விஞ்ஞானி ஐன்ஸ்டீன் மொட்டை அடித்துக் கொண்டிருந்தால் பார்ப்பதற்கு எப்படி இருந்திருப்பாரோ அப்படித்தான் இருப்பார் ஆஸ்கர் தாத்தா.

மண்டை முழுக்க சினிமா. மூளையில் உள்ள ஒவ்வொரு தேய்ந்து போன நியூரானும் கூட சினிமா செய்திகளை சேகரித்து கடத்திக் கொண்டே இருக்கும்.


அவரது கண்களும், காதுகளும் கங்கணம் கட்டிக்கொண்டு சினிமாவின் நல்ல செய்திகளை மட்டுமே கேட்கும்; பார்க்கும்; போலவே அவரது நாக்கும்; சினிமா வாசனையற்ற ஒருவர் கூட அவர் கூறும் சினிமா பற்றிய தொழில்நுட்ப, சுவாரஸ்ய செய்திகளை கேட்டு, மயங்கி, மது உண்ட வண்டை போல அவரது இமெயில் ஐடி, அல்லது whatsapp மூலம் மீண்டும் மீண்டும் அவரை பருக வருவர். யூட்யூபில் நேரலையில் அவர் வந்தால் பேரலையாக ரசிகர்கள் அவரை காண வருவர்.

ஒவ்வொரு வருடமும் உலகின் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் சினிமா விழாக்களில் விருதுகளின் பட்டியலில் என்னென்ன படங்கள் அறிவிக்கப்படலாம் என்பதை அவரது ஏழாம் அறிவு எட்டிப் பிடித்து விடும். உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் வெல்வது யார் என்று கணித்து சொல்லும் கண்ணாடி தொட்டி நீரில் வாழும் octopus அல்ல அவர். சினிமா என்னும் பெருங்கடலை ஆராய்ந்து மூழ்கி முத்து எடுத்தவர்.

என்றேனும் ஒரு நாள் சினிமா குறித்த தகவல்களை அறியாமல் போய்விட்டால் அவருக்கு சினிமியாவே (Cinemia) வந்துவிடும். திரைப்பட விழாக்கள்உலகெங்கும்நடக்கும்பொழுது அவருக்கு கிடைக்கும் அதிகபட்ச தகவல்களால் சில சமயம் சினிபீனியா (Cinepenia)வும் வருவது உண்டு.

அந்த மாதிரி சமயங்களிலெல்லாம் அவரது கையை அலங்கரிக்கும் திறன் பேசி கைக்கடிகாரத்தில் உள்ள உடற்கூறு செயலிகள் (பிபி மானிட்டர், கார்டியாக் மானிட்டர் போன்ற) எல்லாம் செயலிழந்தே விடுகின்றன.

சினிமா அவருக்கு இரண்டு கண்கள் என்றால் இலக்கியம் அவருக்கு எப்பொழுதும் அணிந்திருக்கும் கண் கண்ணாடி போன்றது. அதனால்தான் என்னவோ இதிகாசங்களும், இலக்கியங்களும் காலத்தின் கண்ணாடி என்று அவர் அடிக்கடி கூறுவது உண்டு.



வரலாற்றின் வழி நெடுகிலும் இருக்கின்ற தமிழ், ஆங்கில, மொழிபெயர்ப்பில் உள்ள கிரேக்க, வங்காள, வடமொழி மற்றும் இதர இந்திய மொழிகளில் உள்ள இலக்கியங்களை, இதிகாசங்களை வரி வரியாக வாசிப்பதோடு, நல்ல வார்த்தைகளை அடிக்கோடிட்டு ஆழ்மனதில் சேமித்து வைத்துக் கொள்ளும் பழக்கமும் அவருக்கு உண்டு. நூலகராக அவர் பணியாற்றியதால் ஒவ்வொரு புத்தகத்தின் காகிதங்களில் உள்ள ஆக்சிஜனையே அவர் சுவாசித்து வாழ்ந்தார். இன்னமும் அப்படியே. சில புத்தகங்களை அவர் பேயைப் போல பிடித்துக் கொள்வார். சில புத்தகங்கள் அவரை பேய் போல பிடித்துக் கொள்ளும்.

அப்படித்தான், 65 ஆண்டுகளுக்கு முன்பு திருமணத்தில் நினைவுப் பரிசாக ஆங்கிலேய நண்பர் ஒருவர் அளித்த நளவெண்பா புத்தகம் அவரின் மனதிற்கு நெருக்கமானது.



ஏற்கனவே கதை தெரிந்திருந்தாலும், பலமுறை படித்திருந்தாலும், திருமண நாள் அன்று அந்த புத்தகத்தை, ஒரு முறை தரிசனம் செய்து விடுவார். அதுமட்டுமில்லாமல் நளவெண்பா கதை இடம்பெற்று இருக்கும் மூலக்கதையான மகாபாரதத்தில் வனப்பர்வ காண்டத்தில் உள்ள இந்திரலோகாகமன உப பர்வத்தில் அத்தியாயம் 50லிருந்து 79 வரையுள்ள துணைக்கதையான நள தமயந்தி சரித்திர கதையையும் திரும்பத் திரும்ப கேட்டு தெரிந்து வைத்துக் கொள்வார்.

இம்முறை தரிசனத்தில், புதிய அனுபவம் கிட்டியது.

கர்நாடக சங்கீதத்தையும், மேற்கத்திய இசையையும் பிணைத்து உருவாக்கும் புது இசையைப் போல,

வெண்பாவிற்கு பெயர் பெற்ற புகழேந்தி புலவர் எழுதிய நளவெண்பாவின் மூன்று காண்டங்களையும், மகாபாரதத்தின் நளதமயந்தி கதையையும், ஹாலிவுட்டில் பிரபலமாய் இருக்கும் Syd field அவர்கள் எழுதிய திரைக்கதை நுணுக்கங்களை பற்றிய புத்தகத்தில் வரும் 3 Act structure ரையும் இணைத்து ஒரு புத்தகத்தை எழுத வேண்டும் என்கின்ற எண்ணம் அன்று பிரசவம் ஆனது.

எழுத முயற்சிக்கும் பொழுது தான், சைரன் சத்தம் இல்லாமலே எந்த திசையில் இருந்து வந்து தாக்குமென தெரியாத ஏவுகணை போல், பல்வேறு உறவினர் வீட்டு விழாக்களும், சினிமா ஆடியோ வெளியீட்டில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ள அழைப்பும், காலிங் பெல் அழுத்தாமலேயே கதவைத் தட்டி வரும்.

சமயங்களில் தவிர்க்க முடியாத அழைப்புகளை புறக்கணித்து நிலவறைக்கு (பங்கருக்குள்) சென்று எழுதலாம் என்று நினைத்தால் கூட, அவர் செய்த பாக்கியம் ... ம்ஹூம்... அவர் கல்யாணம் செய்து கொண்ட பாக்கியம் (ஆம். பாக்யம் பாட்டி தான்) தவறி கூட பொய் சொல் உதித்திராமல் எப்பொழுதும் உண்மையின் பக்கம் நின்று, வீடு தேடி வரும் உறவினர்களிடம், "கீழ கார் செட்டுக்கு பக்கத்துல ஒரு தனி ரூம்ல தான் உட்கார்ந்து ஏதையாவது கிறுக்கிட்டு இருப்பார், போய்ப் பாருங்க " என்று அப்பாவியாக அவரை காட்டிக் கொடுத்து) விடுவார்.

ஆஸ்கர் தாத்தாவின் வீடு அமைந்துள்ள அதே தெருவில், ஒரு வீட்டில் வசிக்கும் சின்னமணி என்பவரின் மகன் சண்முகம் என்ற பத்து வயது சுட்டிப் பையன் தான் ஆஸ்கர் தாத்தாவிற்கு உற்சாகப் பானம்.

அப்பாவின் பெயரோடு தனது பெயரை சுருக்கி சின்(%sin)சன்(son) என்று சக சிறுவர்கள் கிண்டலடித்த பட்ட பெயரை சின் சான் என்று கார்ட்டூன் பேரை போல் மாற்றிக் கொண்டு அவன் செய்யும் ஆர்ப்பாட்டங்களால் அந்தத் தெருவில் அவனை அறியாதவர் யாரும் இல்லை. ஆஸ்கர் தாத்தாவிடம் சினிமா ஞானம் பெற்ற ஆஸ்தான சீடன் என்று அவனைக் கூறலாம்.

அவனுக்கும் புரியும் வண்ணம் எழுத ஆரம்பித்து தான் ஆஸ்கர் தாத்தா பல குழந்தைகள் கட்டுரைகளையும், கதைகளையும் பல்வேறு இதழ்களில் பிரசுரித்துள்ளார்.

கோடை பள்ளி விடுமுறைக்கு ஊருக்கு சென்ற சின் சான் இன்னும் இரண்டொரு நாளில் வந்து விடுவான்.

இரவில் மொட்டை மாடிக்கு சென்று ஆவலுடன் வீதியையேப் பார்த்துக் கொண்டிருந்தார் ஆஸ்கர் தாத்தா. வானத்து நட்சத்திரங்களைப் போல ;

அவனது வருகையை நோக்கி ; தேக்கி வைத்திருக்கும் அவனுக்கு உகந்த சினிமா தகவல்களை பகிர்ந்து கொள்ள.

%Cinemia★ புது சொல்/ Ex: அனிமியா சிவப்பணுக்களின் எண்ணிக்கையில் ஏற்படுகின்ற குறைபாடு; cinemia சினிமா தகவல் குறைபாடு

Cineosis★★: புது சொல்/ Ex: ஹிப்நோசிஸ் உளவசிய நிலை; cineosis அளவதிக சினிமா தகவல்களால் மயக்கமுற்ற நிலை



- மூர்த்தி நடராஜன்
பொறுப்பு ஆசிரியர், திரைமொழி

# தமிழ் சினிமாவின் முன்னோடிகள்

ஆத்தியாயம்-9

V.V.பிரசாத்
(தீ சினிமா ரிசோர்ஸ் சென்டரின் ஆவனக்காப்பாளர்)


*(தீ சினிமா ரிசோர்ஸ் சென்டர் (TCRC) ஒரு லாப நோக்கற்ற சினிமா ஆவண காப்பகம் ஆகும். இது இந்திய சினிமாவின், முக்கியமாக தென்னிந்தியாவின் பிராந்திய மொழிகளின் ஒலிஒளி சம்பந்தமான கலைப்பொருட்களின் ஆராய்ச்சிக்காக வடிவமைக்கப்பட்டது. இந்தியாவில் உள்ள சென்னை மாநகரத்தை அடிப்படையாக கொண்டு இயங்குகிறது. மேலும் தகவல் அறிய <https://tcrcindia.com/> இணையதளத்தின் மூலம் தொடர்பு கொள்ளவும்.)*

இந்த அத்தியாயத்தில் நாம் தென் இந்திய திரைபடத்துறையின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்த தந்தைமகன் பற்றி பேச போகிறோம்.

### R. வெங்கையா

ரகுபதி வெங்கையா 1869ம் ஆண்டு ஆந்திராவில் உள்ள மச்சிலிபட்டினத்தில் இந்திய (பிரிட்டிஷ்) இராணுவத்தில் பணியாற்றிய குடும்பத்தில் பிறந்தார். புகைப்படக்கலை மீதான அவரது ஆர்வம் அவரை மவுண்ட் ரோடில் ஒரு புகைப்பட ஸ்டுடியோவைத் திறக்க வழிவகுத்தது. இந்த வியாபாரத்தில் நல்ல வெற்றியைப் பெற்ற பிறகு, அவர் திரைப்படங்களை காட்சிப்படுத்தத் தொடங்கினார், இதுவும் அவருக்கு நல்ல லாபத்தை குடுத்தது. இந்தியா முழுவதும் மட்டும் அல்லாமல் பர்மா இலங்கையிலும் திரைப்பட காட்சிகள் நடத்தி மேலும் லாபம் சம்பாதித்தார். இது அவருடைய ஆர்வத்தை மேலும் தூண்ட நிரந்தர திரைப்பட அரங்கம் அமைப்பதில் ஈடுபட்டார். 1912ம் ஆண்டு மெட்ராஸ் (சென்னை) மாநகரத்தின் முதல் திரையரங்கு கேய்டீ கட்டினார். தொடர்ந்து மெட்ராஸில் மேலும் இரண்டு திரையரங்குகளான கிரௌன் மற்றும் குளோப் (பின்னாளில் ராக்ஸீ என்று அழைக்கபட்டது) துவங்கினார். மற்றும் ஒரு திரையரங்கு இம்பீரியல் மதுராவில் (மதுரை) கட்டினார். துரதிர்ஷ்டவசமாக இந்த திரையரங்குகள் அனைத்தும் முடபட்டு இன்று வணிக அல்லது குடியிருப்பு வளாகங்களாக மாறிவிட்டன.

ஹாரிஸ் பிரிட்ஜ் அருகே உள்ள கெயிட்டி டாக்ஸ் என குறிப்பிடப்




பட்டிருக்கும்

### R. பிரகாஷ்

திரையரங்குகள் வியாபாரத்தில் நல்ல வெற்றி கண்டவுடன் வெங்கையா வின் கவனம் பட தயாரிப்பில் திரும்பியது. அதனால் தன் மகன் பிரகாஷை இங்கலாந்தில் உள்ள பேக்கர்ஸ் மோஷன் பிக்சர் ஸ்டுடியோவிற்க்கு அனுப்பிவைத்தார்.

1901ம் ஆண்டு பிறந்த ரகுபதி சூரிய பிரகாஷ் இங்கலாந்தில் இருந்த பொது நன்கு பயிற்சி பெற்றார். ஓரிரு திரைபடங்களில் இந்தியராக நடித்தார். பிரான்ஸ் மற்றும் ஜெர்மனிக்கு சென்று அங்குள்ள முன்னணி திரைபட நுணுக்கங்களை கவனித்து கற்றுக் கொண்டார். இந்தியா திரும்பியவுடன் தந்தையுடன் இணைந்து கஜலக்ஷ்மி ப்ரொடக்ஷன்ஸ் துவக்கினார். முதல் தயாரிப்பான மீனாக்ஷி கல்யாணம் வெளிவந்தது.

தந்தையின் அறிவுறுத்தல் படி பிரகாஷ் சென்னையில் உள்ள புரசவாக்கத்தில் ஸ்டார் ஆஃப் தி ஈஸ்ட் என்ற ஸ்டுடியோ ஆரம்பித்தார். தூசி மற்றும் வெயில் வராமல் தடுக்க கண்ணாடி கூரை அமைக்க பட்டது. கிலாஸ் ஸ்டுடியோ என்ற பெயருடன் அழைக்கப்பட்டதற்க்கு காரணம் இதுவே ஆகும். இங்கு 1922ம் ஆண்டு எடுக்கப்பட்ட முதல் திரைபடம் பீஷம பிரதீங்கா அல்லது பீஷம வதம் ஆகும். 12000 செலவில் உருவாக்க பட்ட இப்படம் 60000 சம்பாதித்து வியாபாரரீதியாக வெற்றி படமாக அமைந்தது. பிரகாஷ் அவர்களே இப்படத்தை எழுதி, படம் பிடித்து, இயக்கி தயாரித்தார்

கிலாஸ் ஸ்டுடியோவில் எடுக்கப்பட்ட திரைப்படங்கள்:

- நந்தனார் (1923)
- சமுதிர மண்டபம் (1923)
- கஜேந்தர மோக்ஷம் (1924)
- உஷா ஸ்வப்னா (1924)
- திரௌபதி பாக்யா (1924)
- மகாத்மா கபீர்தாஸ் (1925)
- மச்சாவதாரம் (1927)

பிரகாஷ் அவர்கள் நல்ல திறமைவாய்ந்த தொழில்நுட்ப வல்லுனராக இருந்தும் வியாபாரத்திரனில் அவருக்கு இருந்த குறைப்பாடுகள் காரணமாக ஸ்டார் ஆஃப் தி ஈஸ்ட் மூடப்பட்டது.

ஆனால் குடும்ப நண்பர் மொதே நாராயண ராவ் உதவியுடன் மீண்டும் புத்துரபித்து பலமாக திரும்பி வந்தார். காரன்டி பிக்சர் கார்ப்பரேஷன் தொடங்கினார். மற்றொரு குடும்ப நண்பர் மூலமாக சென்னையில் உள்ள தண்டையார்பேட்டையில் அவருக்கு மிக பெரிய நிலம் கிடைத்தது. அங்கு புதிய ஸ்டுடியோ திறந்தார். அவரிடம் உத்வேகத்துடன் கூடிய இளம் கூட்டணி இருந்தது. இதில் பின்னாளில் பெரிய இயக்குநர்கள் ஆன C. புள்ளையா, ஜிதன் பானர்ஜி, C.V. ராமன், A. நாராயணன், P.V. ராவ் மற்றும் Y.V. ராவ் இருந்தார்கள். தங்களுடைய சினிமாவின் எடுக்கும் கலையின் முதல் பாடத்தை இங்கு காற்றார்கள் என கூறலாம். இந்த ஸ்டுடியோவில் தான் தசாவதாரம் (1929) மற்றும் கோவலன் (1929) போன்ற திரைப்படங்கள் எடுக்கப் பட்டன. ஆனால் சரியான திட்டமிடுதல் மற்றும் மேலாண்மை இல்லாமல் தண்டையார்பேட்டை ஸ்டுடியோவும் மூட பட்டது. A. நாராயணன் சொந்தமாக ஜெனரல் பிக்சர்ஸ் கார்ப்பரேஷன் என்ற நிறுவனத்தை துவக்கினார். பிரகாஷ் அதில் சேர்ந்தார். பிரகாஷ் பல வெற்றி படங்களை நாராயணன் நிறுவனத்துக்கு இயக்கினார். அவற்றில் இந்தியா மட்டுமல்லாமல் பர்மா மற்றும் இலங்கயிலும் மிக பெரிய வெற்றி அடைந்த லெய்லாதி ஸ்டார் ஆஃப் மிங்கரெல்லா அடங்கும்.

பேசும்படங்கள் வர தொடங்கியதும் நாராயணன் தென் இந்தியாவின் முதல் பேசும்பட ஸ்டுடியோவான ஸ்ரீநிவாசா சினிடோன் என்ற தன்னுடைய தயாரிப்பு நிறுவனத்தை தொடங்கினார். இங்கு பிரகாஷ் தனது பணியை தொடர்ந்தார். ஸ்ரீநிவாசா சினிடோன் தயாரித்த முதல் படம் நாராயணன் இயக்கத்தில் வந்த ஸ்ரீநிவாச கல்யாணம். பிரகாஷ் ஒளிபதிவாளராக பணியாற்றினார். இரண்டாவது படமான துரௌபதி வஸ்திராபஹரணம் நாராயணன் மற்றும் பிரகாஷ் இணைந்து இயக்கினர்.

R.S. பிரகாஷ் 1930 1940 காலகட்டங்களில் பல படங்களை இயக்கினார் அவற்றில் சில:

- 1935: தூக்கு தூக்கி
- 1936: இந்தரசபா
- 1936: கிருஷ்ணநாரதி
- 1936: நளாயினி
- 1937: ஆண்டாள் திருக்கல்யாணம்
- 1937: ராஜசேகரன்
- 1938: அனாதை பெண் AN ADHAI PENN
- 1939: சிரிக்காதே
- 1940: கிருஷ்ணன் தூது

1936ம் ஆண்டு ஸ்ரீநிவாசா சினிடோன்காக பிரகாஷ் இந்தரசபா படத்தை இயக்கினார். ராஜகுமாரனுக்கும் ஒரு தேவதைக்கும் உள்ள காதலை பற்றிய படம் ஆகும். இந்த கதையை பின்பற்றி முன்னரே ஹிந்தியில் 1932ல் இதே பையருடன் படம் வெளிவந்தது. சவுண்ட் சிட்டி அல்லது ஸ்ரீநிவாசா சினிடோனுக்காக பிரகாஷின் தமிழ் வடிவத்தில் T.K. சுந்தரப்பா, K. ஷாந்தா தேவி மற்றும் சுஷீலா தேவி முக்கிய கதாப்பாத்திரங்களில் நடித்திருந்தனர்.




1937ல் மதுரை மீனாக்ஷி சினிடோன் தயாரித்து விநியோகித்த ராஜசேகரன் வெளிவந்தது. பிரகாஷ் இயக்கியிருந்த இப்படத்தின் மூலம் ராஜம் புஷ்பவனம் தென் இந்தியாவின் முதல் பெண் இசையமைப்பாளர் ஆனார் என்பது குறுப்பிடத்தக்கது. ஜட்டன்பாய் மற்றும் சரஸ்வதி தேவிக்கு பிருகு இந்தியாவின் மூன்றாவது பெண் இசை அமைப்பாளர் என்பது கூடுதல் சிறப்பு. இவை மட்டுமல்லாமல் இப்படம் வெளியாகும் பொழுது இவருக்கு 19 வயது தான் என்பதால் இந்தியாவின் மிக இளம் பெண் இசையமைப்பாளர் என்ற பெருமையயும் பெற்றார்.

தொடரும்...



# வில்லாதி வில்லன் பேரரசு



திரையுலகில் உச்ச நட்சத்திரங்களான விஜய் ,அஜித், கேப்டன் விஜயகாந்த் ,அர்ஜுன், பரத் இவர்களை வைத்து இயக்குநராக வெற்றி அடைந்த பேரரசு %EMI,பேட்டராப், கொற்றவன் படங்களிலும், உப்பு புளி காரம் வெப்சீரியலிலும் நடித்திருந்தார்.

சென்ற மாதம் ஜீன் 18 அன்று வெளியான சென்ட்ரல் திரைப்படத்தில் வில்லனாக நடித்து, மக்களின் கவனத்தை ஈர்த்து நடிப்பிலும் வெற்றி பெற்றிருக்கிறார். தற்போது புதிய படத்தில் போலீஸ் ஆபீசராக நடித்து வருகிறார்.

ஏற்கனவே இயக்குநராக, கதாசிரியராக, திரைக்கதை ஆசிரியராக, வசனகர்த்தாவாக, பாடல் ஆசிரியராக, இசையமைப்பாளராக, திரையுலக சங்கங்களின் பல பொறுப்புகளில் ஜெயித்தவராக இருக்கும் பேரரசு தொடர்ந்து திரைப்படங்களிலும் நடித்து வெற்றிவாகை சூட திரை மொழி மாத இதழ் வாழ்த்தி வரவேற்கிறது.









ஆரா DEVOTIONAL
அறம் தமிழ்
அறம் தமிழ் ஒரு நடுநிலை ஊடகம்
தொடர்புக்கு : 9467208208
திரை மொழி TALKIES
Thiraimozhi Talkies




Owned, Published, and Printed by **R.SUBRAMANIYA BHARATHI.** Printed at **CHENNAI OFFSET PRINTERS**, No, 19/1, 21/2, Kithabath Khan Bahadhur Street, Ellies Road, Chennai- 600 002 and Published from No. 41/14, F3, Loganathan Nagar, 2 nd Street, Choolaimedu, Chennai-600 094. **Editor: R.SUBRAMANIYA BHARATHI.** Mobile: **9566153766, E-mail: thiraimozhinews@gmail.com**